முருகப்பெருமான் துணை

**மகான் போகமகாரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.01.2023, திங்கட்கிழமை

1. தருமபலம் கொண்டு உலகினில்
தரும ஞான ஆட்சி படைக்க
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அண்ணலே அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
நாட்டிட சுபகிருது சிலை திங்கள்
இனிமைபட மூவாறு திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 18 ம் நாள் 02.01.2023, திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை போகமகாரிஷி யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதனை அரங்கன் பதம்பற்றி
அகிலத்தார் வணங்கி ஏற்க
4. ஏற்கவே கருமவினை அகன்று
எல்லா மாந்தருக்கும் மாற்றம்
அற்புதம்பட ஞானமாக தருமமாக
ஆறுமுகனார் சக்தியும் கிட்டி
5. கிட்டியே கலியுக மக்களுக்கு
குறைவிலா பாதுகாப்பும் பலமும்
தட்டாது அடைதல் கண்டு
தரணியோர் அரங்கன் தயவாலே
6. தயவாலே அனைத்து வரமும்கூடி
தரணியை மாற்றும் ஞானிகளாக
தயவுமிக்க தருமவான்களாகத் தேறி
தரணியில் ஞான ஆட்சி படைப்பர்
7. படைக்கவே நல்மாற்றம் நிகழ
பாருலகமெங்கிலும் அன்னதானம்
தடையற நடக்கும் வண்ணம்செய்துமே
தரணியோர் அரங்கனை தொடர
8. தொடரவே மக்களுக்கு மனபலமும்
தேட்டு தனவளமும் கூடி
இடர் இல்லாத பெருவாழ்வை காண்பர்
எக்காலமும் ஞானிகள் துணை தொடர்ந்துவர
9. வருகவே ஞான தெளிவு கூடி
வையகத்தையே காக்க ஞானிகளாக
முருகபெருமான் அருள் ஆசிதனை பெற்று
முழுமைதனை பெற்ற ஞானிகளாக

10. ஆகவே ஆற்றல் கூடி உலகினில்
ஆறுமுகன் தலைமை கொண்ட நல்லதொரு
யுகமாற்றத்தை செய்து நன்கு
உருவாகுவர் ஞானவான் படைகளாக

11. ஆகவே அரங்கமகான் வழிகாட்டலில்
அனைவரும் பெரும் மாற்றம்தனை செய்து
யுகம்தனை ஞான யுகமாக ஞான ஆட்சிகாலமாக
உயர்வுபட செய்துமே சிறப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–